Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஆவணி 26    ( 11 - 09 - 1991 )    புதன்கிழமை    ஓசை: 205

## வடக்கு-கிழக்கு மாகாணசபை சின்னம் கைவிடப்பட்டது

வடக்கு-கிழக்கு மாகாணசபை தனது வழமையான சின்னத்தைக் கைவிட்டு இலங்கை மத்திய அரசின் சின்னத்தைப் பயன்படுத்தி வருகின்றது. மேற்படிமாகாணசபையின் கீழ் இயங்கும் அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகியவற்றின் கடிதத் தலைப்புக்கள், மற்றும் அலுவலக ஆவணங்களில் தற்பொழுது மத்திய அரசின் சிங்க இலச்சினை உடைய சின்னத்தை பயன்படுத்தி வருகின்றது. மேலும் இம்மாகாண சபையின் பெரியளவிலான சின்னம் நீண்ட காலமாக மட்டக்களப்பு நகர மணிக்கூட்டுக்கோபுரத்தில் காணப்பட்டது. தற்பொழுது அதுவும் அகற்றப்பட்டிருக்கின்றது.

# வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் நாம் பலமாகவே உள்ளோம்

## திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் நாம் பலமாகவே உள்ளோம். அங்கு நகர்ப்பகுதியை மட்டுமே இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் கிராமப்புறங்களின் எங்களின் நிலை பலமாகவே உள்ளது. இவ்வாறு திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார்.

கோண்டாவிலில் நேற்று நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலனும் உடன் இருந்தார்.

**சொந்த மண்ணிலேயே அகதிகளாக**

மேலும் அவர் திருமலையிலும் மட்டக்களப்பு நிலை தான். சொந்த மண்ணிலேயே மக்கள் அகதி முகாம்களில் அகதிகளாக வாழ்கின்றனர். சொல்லொணாத் துயரங்களை அவர்கள் அங்கு அனுபவித்து வருகின்றார்கள்.

சிங்களக் குடியேற்றங்களை கொண்டு தமிழர்களின் நிலங்களை சிறிலங்கா அரசு திட்டமிட்டுச் சூறையாடி வருகிறது இருபத்திரெண்டு தமிழ்க்கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் அகதிகளாக முற்றாகவே வெளியேறியுள்ளனர். ஆயிரத்து நூற்றிப் பத்து சதுர மைல் பரப்பளவைக்கொண்ட திருமலை மாவட்டத்தில் இது வரை 119 இராணுவ முகாம்களும், 50 பொலிஸ் நிலை



யங்களும் உள்ளன. இருந்தும் அங்கு புலிகளின் பலம் இராணுவத்தினருக்கு சமதையா

**தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்**

## அவசர அனுமதிக்கு புதிய அலுவலகங்கள்

(நமது நிருபர்)

வடபகுதிக்கு வெளியே செல்ல அவசர அனுமதி கோரும் பொது மக்கள் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்க்கும் நோக்குடன் புதிதாகச் சில அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் நடைமுறைக்கு வருகின்றது. இதன்படி குடாநாட்டிற்குள் அவசர அனுமதி வழங்கும் அலுவலகங்கள் பின்வருமாறு அமையும்.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | அனுமதி வழங்கும் அலுவலகம் |
|---|---|
| நல்லூர், யாழ்ப்பாணம். | திருநெல்வேலி பாற்பண்ணைக்கு அருகில் உள்ள அலுவலகம் |

(4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் தொடர்ந்தும் மோதல்; குண்டுவீச்சு; எறிகணை தாக்குதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலுள்ள காட்டுப்பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையே தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடந்து வருகின்றது. இரவு பகல் என்று ஓய்வில்லாமல் விமானங்கள் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன சூழவுள்ள முகாம்களிலிருந்து பலமான எறிகணை வீச்சுக்களும் இடம் பெற்று வருகின்றது.

மணலாறு மாவட்டத்தில்

எதிர்த்து விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஆனையிறவுத் தாக்குதலின் போது ஈடுபடுத்தப்பட்ட விசேட இராணுவப்படையினர் இடைவிடாது தாக்குதல் நடத்தும் விமானங்களின் துணையோடு காட்டுப்பகுதிக்குள் முன்னேற முயன்ற போதும் விடுதலைப்புலிகள் பலத்த எதிர்த்தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்திலும் அவசரஅனுமதி அலுவலகம்

மன்னார் மாவட்டத்தில் பூநகரி, பண்டிவிரிச்சான்,

தொடர்பு கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள்இந்த

கோண்டாவிலில் நேற்று நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலனும் உடன் இருந்தார்.

**சொந்த மண்ணிலேயே அகதிகளாக**

மேலும் அவர் திருமலையிலும் மட்டக்களப்பு நிலை தான். சொந்த மண்ணிலேயே மக்கள் அகதி முகாம்களில் அகதிகளாக வாழ்கின்றனர். சொல்லொணாத் துயரங்களை அவர்கள் அங்கு அனுபவித்து வருகின்றார்கள்.

சிங்களக் குடியேற்றங்களை கொண்டு தமிழர்களின் நிலங்களை சிறிலங்கா அரசு திட்டமிட்டுச் சூறையாடி வருகிறது. இருபத்திரெண்டு தமிழ்க்கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் அகதிகளாக முற்றாகவே வெளியேறியுள்ளனர். ஆயிரத்து நூற்றிப் பத்து சதுர மைல் பரப்பளவைக்கொண்ட திருமலை மாவட்டத்தில் இது வரை 119 இராணுவ முகாம்களும், 50 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. இருந்தும் அங்கு புலிகளின் பலம் இராணுவத்தினருக்கு சமதையாகவே உள்ளது என்றார்.

**பாரம்பரிய பிரதேசங்களைப் பிரிக்கத் திட்டம்**

தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு சிறிலங்கா அரசு அன்றிலிருந்து இன்று வரை

(4 ஆம் பக்கம் பார்க்க)



லங்கா இராணுவத்தினருக்குமிடையே தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடந்து வருகின்றது. இரவு பகல் என்று ஓய்வில்லாமல் விமானங்கள் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன சூழவுள்ள முகாம்களிலிருந்து பலமான எறிகணை வீச்சுக்களும் இடம் பெற்று வருகின்றது.

மணலாறு மாவட்டத்தில் கடந்த இருபத்தொன்பதாம் திகதி முதல் சிறிலங்கா இராணுவம் பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விமானங்களின் தாக்குதலின் உதவியோடு முன்னேற முயலும் இராணுவத்தினரை

ஆனைபிறவுத் தாக்குதலின் போது ஈடுபடுத்தப்பட்ட விசேட இராணுவப்படையினர் இடைவிடாது தாக்குதல்

பொழுதும் விடுதலைப்புலிகள் பலத்த எதிர்த்தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் மாவட்டத்திலும் அவசர அனுமதி அலுவலகம்

மன்னார் மாவட்டத்தில் பூநகரி, பண்டிவிரிச்சான், முழங்காவில், விடத்தல்தீவு ஆகிய இடங்களில் அவசர அனுமதி வழங்கும் அலுவலகங்கள் இயங்கும்

சிபாரிசு மற்றும் விதிவிலக்கின் அடிப்படையில் அனுமதி பெற விரும்புவோர் யாழ்மாவட்டத்தில் கோண்டாவில் மாவட்டச் செயலகத்திற்கு அண்மையிலும், மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சான் அலுவலகத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள்இந்த நடைமுறைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் துஷ்பிரயோகம் செய்பவர்கள் மற்றும் அபிப்பிராயங்களை சொந்தப்பெயர் விபரங்களுடன் பொறுப்பாளர், தலைமைச் செயலகம், போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு த. பெ. இலக்கம் 1180 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தெரியப்படுத்தும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

**தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்**

# புலிகளின் ஆதரவாளர்கள்மீது தமிழகத்தில் நடவடிக்கை

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்துபவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவார்கள் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.

மாநில சட்டப் பேரவையில் நேற்றுப் பேசிய செல்வி ஜெயலலிதா எந்த விதமான தேசவிரோத நடவடிக்கையையும் அரசு சகித்துக் கொள்ளாது என்றும், விடுதலைப் புலிகளுக்கு விசுவாசத்தைக் காட்டுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

## புலிகள் ஆதரவாளர் கூட்டம் பொலிசுக்குத் தெரியாது

(சென்னை)

மதுரையில் புலிகள் ஆதரவாளர்கள் நடத்திய கூட்டம் பற்றி மதுரை பொலிஸ் ஆணையாளர் தனக்குஒன்றும் தெரியாது என்று வெளிவந்த பத்திரிகைச் செய்தியை ஆதாரம் காட்டிப் பேரவையில் பேசிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தன், இந்த நிலையில் எமது பொலிஸார் எப்படிப் புலிகளைமுறியடிக்கப் போகிறார்கள் என்று கேட்டார்.

மதுரையில் புலிகள் ஆதரவாளர்கள் அந்த மாநகராட்சி ஊழியரின் விடுதியிலேயே கூட்டம் ஒன்றை நடத்தி காலஞ்சென்ற ராஜீவ் காந்தி போன்ற தலைவர்களை தகாத வார்த்தைகளால் திட்டி செயற்பட்டிருப்ப தப் பற்றி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் குமரி அனந்தன் நேற்றுப் பேரவையில் தெரிவித்தார்.

இந் நிலையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறுக்கிட்டுப் பேசினார்.

புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் தேசவிரோத

(4ஆம் பக்கம் பார்க்க)

**கிராம சேவையாளரினால்**

# நிவாரணமின்றி அவதியுறும் பொன்னாலை மக்கள்

(சங்கானை)

கிராம சேவையாளரின் செயலினால் பொன்னாலை குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிவாரண உதவியின்றி கடந்த சில மாதங்களாக அவலப்படுகிறார்கள்.

பொன்னாலை குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களான இவர்கள் வீடுகளை இழந்தும், தொழிலின்றியும் வாழ்கிறார்கள். இவர்கள் தமது கிராம சேவையாளர் மூலம் அப்பிரிவு உதவி அரசாங்க அதிபரிடம் நிவாரணம் கோரியும் அவர் கையை விரித்து விட்டாராம்.

தமது நிலையை அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகருக்குக் கடிதமூலமும், நேரடியாகவும் விளக்கியதும், அவர்களின் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்க அதிபர் உடனடியாகச் செயற்படும் படியாகப் பணிப்புரை வழங்கினார் குடியேற்ற வாசிகளுக்கும், சுமார் 100 யார் சுற்றுச் சூழவில் வாழ்பவர்களுக்காக மொத்தம் 69 குடும்பங்களுக்கு 'அ' அட்டையை 'இ' அட்டையாக மாற்றி உதவுமாறு பணிப்புரை வழங்கியதுடன் 69 குடும்பங்களின் பட்டியலொன்றையும் இணைத்துக் கொடுத்தார்.

இத்தனைக்கும் ஜே-171 மூளாய் கிராம சேவையாளர் உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படவேண்டிய பட்டியலைத் தன் மூலமாகக் கொடுப்பதற்கு உரிமையோடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# மலையை கெல்லி எலியைபிடிக்கும் யாழ் செயலக அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர் தொடங்கி ஒரு வருடமும் மாதங்கள் இரண்டும் ஆகின்றன. அதாவது அறுபது வாரங்களாகின்றன. இப்படியிருக்கப் பதினொரு வார நிவாரணம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளமை குறித்து பாவனையாளர் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நிவாரணப் பங்கீடுகளோ, பணம் கொடுத்துப் பெறப்படும் பொருள்களோ சொற்பமாக இருக்கையில், யாழ் செயலக அதிகாரிகள் உணவுப்பொருள் பற்றாக்குறையையும், கிடைப்பதில் ஏற்படும் தடங்களையும் வெளிக்கொணராமல் பொருள் பெருமளவில் வருகிறதுஎன்று ஆகாயக் கோட்டை கட்டுகிறார்கள் இப்படி மக்களை ஏமாற்றுவது கவலைக்குரியது என்று பாவனையாளர்கள் கூறுகிறார்கள்.

யாழ்ப்பாணத்துக்குஅத்தியாவசியப் பொருள்கள் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாகக் கிடைக்கவில்லை என்று கூறும் பாவனையாளர்கள், குறிப்பாக மண்ணெண்ணெய்' சீனி, சவர்க்காரம் ஆகியன கிடைப்பதில்லை எனகிறார்கள்.

லீற்றர் மண்ணெண்ணெய், ரூபா 250 வரை விற்பதும் சாதாரண சலவைச் சவர்க்காரம் ரூபா 50 விற்பதும் தெரிந்ததே. தேங்காய் எண்ணெயும் யானைவிலைதான்

இந்நிலையில் 65 பீப்பாய் மண்ணெண்ணெய் வருகிறது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்று கொண்டிருக்கும் மோதலில் 05-09-91 அன்று நடந்த மோதலில் சீமா (இராஜலட்சுமி சுந்தரலிங்கம் முல்லைத்தீவு) அன்றைய மோதலில் விழுப்புண்பட்டு சிகிச்சை பெற்று வந்த சேரன் (இராஜரட்ணம் ஜெயராஜ் அளவெட்டி) ஆகியோர் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர்.

09-09-91 அன்று நடைபெற்ற மோதலில் தண்டேஸ் (கனகநாயகம் புலேந்திர மோகன் பருத்தித்துறை) பிரவீணா (செல்வநாயகம் யசோதாதேவி முகமாலை, பளை) ஆகியோர் வீரமரண

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரு கிணற்றில் இருந்து 8 எலும்புக் கூடுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டு கிணறுகளில் போட்டு மூடப்பட்டவர்கள் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டு வருகின்றன.

நேற்றைய தினமான 10-ம் திகதி (10-9-91) செவ்வாய்க்கிழமை யாழ். கச்சேரியில் உள்ள புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள், வேலணை உதவி அரசாங்க அதிபர், சட்ட வைத்தியதிகாரி, கிராமசேவை அலுவலர், செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி உட்பட்ட குழுவினர் சகிதம் மண்டைதீவுக்குச் சென்று இராணுவத்தினரால் மூடப்பட்ட கிணறுகள் தோண்டும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டு கிணறுகள் தோண்டப்பட்டன 8 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

ஒரு கிணற்றில் இருந்து 5 பேருடைய எலும்புக்கூடுகளும் மற்றைய ஒரு கிணற்றில் இருந்து 3 பேருடைய எலும்புக கூடுகளும் எடுக்கப்பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்/பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

[முற்றிலும் பல்கலைக்கழக வசதிகளைக் கொண்ட நிறுவனம்]

**G.A.Q:-** LECTURES IN DAY TIME
LECTURES IN SAT & SUN.

ஆரம்பம்: 14-09-1991 (காலை 8.00 மணி)

1st. in **COMMERCE**
LECTURES IN DAY TIME
LECTURES IN SAT & SUN.

ஆரம்பம்:- 14-09-1991 (காலை 8.00மணி)

மு. குறிப்புகள்:-

(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்

(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்

(இ) G. A. Q 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்.

(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்

(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
ANAIPANTHY, JAFFNA.
(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

(B.3076)



## எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1) | கேள்வியும் நிரம்பலும் | விலை 18/- |
| 2) | நவீன அரசியற்கோட்பாடுகள் | விலை 45/- |
| 3) | நடைமுறை விடயங்கள் | விலை 40/- |
| 4) | நடைமுறை விடயங்கள் ii | விலை 35/- |
| 5) | சிலப்பதிகாரம் | விலை 14/50 |
| 6) | குறியீட்டு அளவையியல் | விலை 30/- |
| 7) | வெளிநாட்டு வியாபாரம் | விலை 30/- |
| 8) | பொது உளச்சார்பும் கல்வி முகாமைத்துவமும் | விலை 39/50 |

வெளியீடு
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

B/3092)


## விநாயக சதுர்த்தி

ஈச்சமோட்டை வேட்டிப் புலம் ஞான வைரவர் ஆலயத்தில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு விசேட அபிஷேகமும், விசேட பூசையும் இடம்பெறவுள்ளது பிற்பகல் 6.30 மணி தொடக்கம் 9 00 மணி வரை செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதில் சிறந்து நின்றவன் யார் என்ற தலைப்பிலான பட்டிமண்டபம் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

## 1978 க்குமுன் பெற்றவர்கள் புதுப்பிக்கவும்

(திருக்கோணமலை)

திருக்கோணமலைப் பகுதியில் 1978 ஆம் ஆண்டிற்கு முன்னர் அடையாள அட்டைகளைப் பெற்றோர் அவற்றை மீளப் புதுப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கிராமசேவையாளர் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## உதவிப்பணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள காச, புற்று நோயாளர்களின் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி கொடுப்பனவை பெறுபவர்கள் எதிர் வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக யாழ் அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்து பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது

(21)

## வரி விளம்பரம்

### தவறவிடப்பட்டது

சஸ்தூரியார் வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில், கொக்குவில் மேற்கு அரசடியைச் சேர்ந்த பொன்னையா பத்மநாதன் ஆகிய எனது

## 60 ஆம் நாள் நினைவாக!

லெப். காந்தன் (கண்ணன்)

(நெளுக்குளம் வவுனியா)

| தாயின் மடியில் | தாயக மடியில் |
|---|---|
| 07.08.1972 | 11 07.1991 |

குயில் குஞ்சாய் கொஞ்சநாள்
பழகிப் போன மாவீரனே!
எங்கள் சின்னக் காந்தா
ஒரு பாசப் பறவையாய்
நீ வந்ததும், பேசியதும், பழகியதும்
நினைவுகளாய் எம்மோடு
வாழ்ந்து கொண்டிருக்கையில்
உனக்கு மரணமேதடா?
நீ மரணிக்கவில்லை
எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!

ஓமந்தை. உன் அக்காள்

(R/1726)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 47ஆம் நாள் நினைவஞ்சலி




## வீரவேங்கை ஜெமினி

(கண்ணன்)

ஞாபகார்த்தமாக மென்பந்து

கிரிக்கட் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து 11 பேர் கொண்ட 20 ஓவர்கள். 7 பேர் கொண்ட 10 ஓவர்கள் கிரிக்கட் போட்டிகளை நடாத்த உள்ளனர். பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

| | |
|---|---|
| குமரன் விளையாட்டுக்கழகம் | ஷண்வர்த்தக |
| கோண்டாவில் கிழக்கு, | விளம்பரசேவை |
| கோண்டாவில். | பஸ்நிலையம், |
| | யாழ்ப்பாணம். |

விண்ணப்ப முடிவு திகதி:- 25-09-1991

(R/1730)


## நினைவு கூருகின்றோம்...



## லெப் கேணல் சரா
### (சின்னத்துரை ஜீவராசா)

வீரஜனனம்: 19 04 1962 | வீரமரணம்: 27-07-1991

லெப்டினன்ட் கேணல் சரா,
கண்விழித்துச் சிறிய கல்லூரிப் பூகம்பம்
சுதந்திரப் பூமியின் சுகத்துக்காக
இந்தச் சூரிய மைந்தன்
தன்னையே சுட்டெரித்துக் கொண்டான்.
இந்தியப் படைகளின் ஈன நடத்தையினால்
இவன் சிந்திய குருதித் துளிகளை
இந்த மங்கள பூமிதன்
குங்கும நீறாக அணிந்து கொண்டது.
இவன் ஆனையிறவில் அஸ்தமித்தவனல்ல...
தமிழனின்
மானவுணர்வுக்கு மகுடம் சூட்டியவன்

அண்ணா, அக்கா,
மருமக்கள்.

R/1731)



## வீரவேங்கை அமலதாஸ்
### (கணேசராஜா முரளீதரன்)

மானிப்பாய்

வீரஜனனம் 27.04.1971 | வீரமரணம் 11.09.1990

''கோட்டையிலே கொடி பறக்க
உன்னுயிரை அர்ப்பணித்த அன்புச் செல்வமே
உன் முகம் காணாது எங்கள் உள்ளம் வாடுதையா
இனி எப்பொழுது உனது இனிய முகம்
காண்போமோ?

மானிப்பாய்.
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(B/3095)

---

சாங்க அதிபர் பணிமனைக்கு வந்து பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது

(21)

## வரி விளம்பரம்

### தவறவிடப்பட்டது

கஸ்தூரியார் வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில், கொக்குவில் மேற்கு அரசடியைச் சேர்ந்த பொன்னையா பத்மநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் இலக்கம் 361861540 V கலால் இலாகா அடையாள அட்டையும் சேர்ந்து தவறிவிட்டன. கண்டெடுத்தவர் ஒப்படைக்குமிடத்துத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(R-1733)

### ஜீவிதா

### தொழில் நுட்பக் கூடம்

ரீ வி டெக், றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும். விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும். (புரட்சிப்பாடல்கள் பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம். யாழ்ப்பாணம்.

(B/3094)

---

## வெளிவாரி பட்டப்படிப்புக்கள்
### பேராதனை - யாழ்ப்பாணம்

கலைமுதற் தேர்வு - G. A. Q.
வர்த்தக முதற் தேர்வு - 1st in Com

A/Lஇல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ யாழ் பல்கலைக்கழக விண்ணப்ப
முடிவு திகதி 30.09.1991

விரிவுரைகள் ஆரம்பம்: 14.09.1991 (8மணி)

★ பேராதனை பல்கலைக்கழக விண்ணப்ப
முடிவு திகதி: 05.10.1991

விரிவுரைகள் ஆரம்பம்: 05.10.1991 (8 மணி)

நிர்வாகி

### புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B-3090)

---

(R/1730)

# நினைவு கூருகின்றோம்...

## 1991-09-11

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில்
இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்
சூட்டில் வீரமரணமெய்திய
**டட்லி** (க. கருணாகரன்-40ஆம்கிராமம் மட்டக்களப்பு)

யாழ். நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில்
முகாமிட்டிருந்த இந்தியப் படையினரால் சுட்டுக்
கொல்லப்பட்ட ஈச்சமோட்டையைச் சேர்ந்த
தமிழ் பொறியியலாளர்

1989ஆம் ஆண்டு கஞ்சிகுடியாற்றில் தேசவிரோதிகள்
மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
**கப்டன் குரூஸ்** (ந. பாக்கியராசா - காரைதீவு)

1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில்
எதிர்பாராத விதமாக கண்ணிவெடி வெடித்ததில்
எமைப்பிரிந்த
**கெல்டன்** (மட்டக்களப்பு

வசாவிளானில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட
தாக்குதலில் வீரமரணமெய்திய
**தயான்/தயாளன்** (இராசையா இராசேந்திரகுமார் - றெட்பானா, விசுவமடு)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்
படையினருடனான நேரடி மோதலின் போது
வீரமரணமெய்திய
**அமலதாஸ்** (கணேசராசா முரளிதரன் - வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினர்
மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரமரணமெய்திய
**முரளி** (ஓட்டுமடம்)

நெடுங்கேணி நயினாமடுப் பகுதியில் சிற்றூர்தி மீது
சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்கு
வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட
இரு தமிழ்ப் பெண்கள்

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் கடத்திச்
செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8088)

**சிந்தனைக்கு**

வாழ்க்கையின் குறிக்கோள்
அறிவு அல்ல; செயலாக்கமே.

— தாமஸ் ஹக்ஸ்லி

ஈழநாதம்

31, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், 11-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2339 நிர்வாகப்பிரிவு [illegible]
[illegible]

## வரலாற்றுத் திரிபிற்கு முற்றுப்புள்ளி

ஆறாம் ஆண்டிற்கான வரலாற்றுப் பாடநூல் நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டது. வரலாற்றுத் திரிபுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முதல் முயற்சியாக இவ் வரலாற்றுப் பாடநூல் வெளியீடு அமைந்துள்ளது.

இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கே உரியது என்ற கோட்பாட்டின் அடிப்படையில், இலங்கையின் கடந்தகால வரலாற்றின் ஒரு பகுதியை பௌத்த சிங்கள பேரினவாதிகள் திரித்தும், மறைத்தும் வந்தனர். அத்தோடு தீய நோக்குடன் சிங்களவர் வரலாறு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டும் வந்தது.

இதேவேளை தமிழர் வரலாறு திரிபுபடுத்தப்பட்டது. தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்பட்டும் வந்தன. இறுதியில் தாம் வரலாற்றின் ஆதாரமாகக் கொள்ளும் மகாவம்சத்தில் காணப்படும் தமிழர் பற்றிய குறிப்புகளையே திரிபுபடுத்தி வெளியிடும் அளவிற்கு பௌத்த பேரினவாதம் செயற்பட்டது.

இதன் காரணமாக உண்மையான தமிழர் வரலாற்றை மாணவர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. இதன்காரணமாக தமிழீழ தேசத்தின் மீது தமக்குள்ள உரிமையை அவர் தெளிவாக உணர்ந்து கொள்ள வில்லை. இலங்கைத் தீவில் தமிழருக்கென ஒரு அரசு இருந்தது. இதனைத் தமிழ் மன்னன் ஆண்டான். அவர்கள் இம் மண்ணிற்காகப் பெரும் போர்களை நடத்தினார்கள் என்பதையும் உணர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி குறிப்பிட்டது போன்று "நல்லூர் கோயிலும் அங்கிருந்த தமிழ் அரசரின் வரலாற்றுச் சின்னங்களும் இடிக்கப்பட்ட வரலாறு நம்மவர்களுக்குத் தெரியாது. இன்று நல்லூர் கோயிலுக்குச் செல்பவர்கள் அன்று நல்லூர் வரலாற்றுச் சின்னங்கள் இடிக்கப்பட்டு கோட்டை கட்டப்பட்டபோது எமது மூதாதையரே இக்கற்களை அதற்குச் சுமந்து சென்றனர் என்பதையும் அறிந்திருக்க மாட்டார்கள்."

இந்த வரலாற்றை எமது இளைஞர்கள் அறிந்திருப் பார்களேயானால் விடுதலைப் போராட்டம் இன்று

# நித்திகைக்குள ஒருவார மோதலில்

# 36 புலிகள் வீரமரணம்

(மணலாறு)

நித்திகைக்குளம் பகுதியில் இருந்து பல முனைகளில் முன்னேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சண்டையின் போது 02-09-91 இல் இருந்து 08-09-91 வரையான நாட்களில் 36 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

★ செந்தூரன் (முருகேசு சுபாஸ்கரன் திருக்கோணமலை)
★ பரணி (பரஞ்சோதி புகனேஸ்வரன்)
★ இந்திரன் (மரியதாஸ் மரியஜூட், திருக்கோணமலை)
★ கண்ணன் (கந்தசாமி கேசவன், மன்னார்)
★ அமுதன் (இராசதுரை சிவக்குமார், மன்னார்)
★ குமுலன் (ஞானசேகரன் கிருஷ்ணரூபன், ஏழாலை)
★ கவாஸ்கர் (கனகசபை சுமித்திரன் சிறுப்பிட்டி)
★ நடேசதேவன் (தம்பிராசா ஏரம்பமூர்த்தி மட்டக் களப்பு)
★ கோவிந்தன் (சிவலிங்கம் தெய்வேந்திரன் அம்பாறை)
★ றோகினராஜ் (சின்னத் தம்பி புஷ்பராஜா பழுகாமம்)
★ அமல் (கந்தசாமி இராஜ் குமார், அக்கரைப்பற்று)
★ சுந்தரேஸ் (சின்னத்தம்பி முனைக்காடு, மட்டக் களப்பு)
★ மதுரா (நல்லதம்பி கனா கிளிநொச்சி)
★ கணகன் (நாகேந்திரன் பாலேந்திரன், உருத்திர புரம், கிளிநொச்சி)
★ கலிஸ்ரன் (பரமகுட்டி ஜெயக்குமார், நச்சன்தீவு, மட்டக்களப்பு)
★ இராவணன் (கதிரவேலு கிருபாகரன், நெல்லியடி)
★ டார்வியா (மரியகெரட்டி யோசப் அல்வாய் மேற்கு)
★ கிமா (சுந்தரலிங்கம் இராச லட்சுமி பொன்நகர், முள்ளியவளை)
★ அருள்நங்கை (பிரேமலதா மார்க்கண்டேசர், வறணி வல்வெட்டித்துறை)
★ பாபு (அந்தோனி நிக்கலஸ் சிவகுமார், கிரான், மட்டக் களப்பு)
★ அம்பி (முத்தையா கணேஸ் செம்மண்தீவு, மன்னார்)
★ பாருக் (தனபாலன் சிறிதரன், சிறுப்பிட்டி, நீர்வேலி)
★ பாபு (தங்கவடிவேல் சசி குமார், தோப்பூர், மூதூர்)
★ அகிலன் (கந்தையா தேவ தேவா, இருதயபுரம், மட் டக்களப்பு)
★ சுது (அமரலிங்கம்மணியம், முனைகாடு, மட்டக்களப்பு)
★ செட்டி (பாக்கியநாதன் பிரேம்குமார், விடத்தல் தீவு, மன்னார்)
★ ஈசன் (சுப்பிரமணியம் பால கிருஷ்ணன், கணேசபுரம், மன்னார்)
★ பிரேம்குமார் (கந்தையா தயாபரன், கரவெட்டி மத்தி)
★ ராணி (சந்திரயோகினி செல்வநாயகம், வட்டக் கச்சி, கிளிநொச்சி)
★ பரிமளா (சந்திரபவானி முத்துமாலை, திருநெல் வேலி)
★ திலகா (இரத்தினேஸ்வரி சரவணமுத்து, உருத்திர புரம், கிளிநொச்சி)
★ அக்கினோ, (கலைவாணி இரத்தினம், கைதடி, சாவ கச்சேரி)
★ மதுரா (வடிவாம்பாள் பரமு, மீசாலை, சாவகச் சேரி)
★ குணசீலி (சிவராஜி தியாக ராஜா, திருநெல்வேலி)
★ கல்பனா (அருள்நிதி கனக ரத்தினம், அல்வாய் தெற்கு)
★ கஜீயா (சதீஸ்வரி கண பதிப்பிள்ளை, கரணவாய், கரவெட்டி)

# "பொதுமக்களின் பங்களிப்பால் போராட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது"

கேள்வி: அம்பாறை மாவட்டத்திலுள்ள அகதி முகாமில் மின் ஒழுக்கால் சில அகதிகள் மரணமானதாக செய்திகள் வெளிவந்தனவே. இதுபற்றி மேலதிக விபரம் ஏதாவது...

பதில்: அதுஒரு திட்டமிட்ட செயலாகும் உண்மையில் மின் ஒழுக்கினால் அவ்வாறான சம்பவம் நிகழவில்லை. முஸ்லிம் ஊர்காவல்படையினரின் கைக்குண்டு வீச்சினால் தான் அந்தமரணங்கள் நிகழ்ந்தன. தாயிடம் பால் குடித் படுகொலைகளைப் புரிந்துள்ளனர்.

சம்பவம் நடைபெறும் போது அதிபர் அங்கு இல்லை. பிள்ளைகளும் அன்று பாடசாலைக்கு வரவில்லை. பின்னர் மின் ஒழுக்கால் இச்சம்பவம் நடந்ததென்றும், பட்டாசு கொழுத்தியதால் இந்த விபரீதம் ஏற்பட்டுவிட்டதென்றும் பத்திரிகைகளில் செய்தி

இதேபோலத்தான் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த எமது தாயக மண்ணில் நாம் எந்த இடத்தில் இருந்து போராடினாலும் அது போராட்டத்தின் வெற்றிக்காகத்தான். இராணுவம் எந்த மூலையில் அழிந்தாலும் அது போராட்டத்தின் வெற்றிக்காகத்தான் கிழக்கில் இருந்து வரும் இரா

பதில்: இந்திய இராணுவத்தினரின் பாணியில் அவர்கள் முகாம்கள் அமைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைகின்றார்கள். ஆனால் இந்திய இராணுவத்தினர் மற்றும் இயக்கங்களுடன் மோதிய அனுபவம் எமக்கிருப்பதால் எம்மால் எதனையும் தாக்குப் பிடிக்க முடியும்.

கேள்வி: இவ்வளவு காலத்தில் போராட்ட ரீதியாக நீங்கள் என்ன வளர்ச்சியைக் கண்டிருக்கிறீர்கள்.

மட்டக்களப்பு நிலைமைகள் குறித்து விடுதலைப்

தினர்களே என்பதையும் உணர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி குறிப்பிட்டது போன்று ''நல்லூர் கோயிலும் அங்கிருந்த தமிழ் அரசரின் வரலாற்றுச் சின்னங்களும் இடிக்கப்பட்ட வரலாறு நம்மவர்களுக்குத் தெரியாது. இன்று நல்லூர் கோயிலுக்குச் செல்பவர்கள் அன்று நல்லூர் வரலாற்றுச் சின்னங்கள் இடிக்கப்பட்டு கோட்டை கட்டப்பட்டபோது எமது மூதாதையரே இக்கற்களை அதற்குச் சுமந்து சென்றனர் என்பதையும் அறிந்திருக்க மாட்டார்கள்.''

இந்த வரலாற்றை எமது இளைஞர்கள் அறிந்திருப்பார்களேயானால் விடுதலைப் போராட்டம் இன்று எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்கும். எமது மண்ணின் மீதுள்ள பற்றும் அதிகரித்திருக்கும்.

நேற்று முன்தினம் முடிவுற்ற நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். மனமுருகி முருகனை வழிபட்டார்கள். ஆனால், இவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் போராட்டத்தில் நேரடியாக இணைந்து கொள்ளாதவர்கள். இவர்கள் கடந்த கால வரலாற்றை சரியாகப் புரிந்திருந்தால் குறைந்தபட்சம் நல்லூரைப் பாதுகாக்க வேணும் போராட்டத்தில் இணைந்திருப்பார்கள். வரலாறு தெரிந்திருப்பின் அந்நியர் ஆதிக்கத்தின் போது எமது ஆலயங்களுக்கு ஏற்பட்ட அவலங்களை இவர்கள் தெளிவாக அறிந்திருப்பார்கள். தமிழரின் மண் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தனியாக நிலத்தை மட்டும் பாதுகாத்தல் என்பதல்ல. அதில் வாழும் மக்களின் வரலாறும், கலைபண்பாடு உட்பட சகலதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

நல்லூரைப்போன்றே முன்பு திருக்கோணேஸ்வரத்தையும், முனீஸ்வரத்தையும், கதிர்காமத்தையும், திருக்கேதீஸ்வரத்தையும் தமிழர்கள் இலட்சக்கணக்கில் சென்று வழிபட்டார்கள். ஆனால் இவற்றில் இன்று நல்லூரை மட்டுமே சுதந்திரமாகக் கூடிநின்று வழிபடுகிறார்கள். இவற்றில் கதிர்காமம், முனீஸ்வரம் என்பனவற்றுக்கு செல்வதை தமிழர் மறந்து விட்டார்கள் அங்கு திருவிழாக்களில் கஞ்சிய நடனம் இடம்பெறுகின்றது. அதற்குரிய உரிமையை தமிழர் இழந்து வருகின்றனர். திருக்கோணேஸ்வரம் வாலாறே மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. இராணுவ நெருக்கடியால் கேதீஸ்வரத்தில் பூசைகள் யாவும் நிறுத்தப்பட்டு விட்டன.

இலட்சக்கணக்கில் வழிபாட்டுக்குச் சென்ற பக்தர்கள் இன்று அவ்வாலயங்களைக் கைவிட்டுவிட்டார்கள். அவ்வாலயங்களின் முக்கியத்துவங்களை அவர்கள் மறந்து விட்டார்கள். இதற்கு அவற்றின் வரலாறும், அவற்றின் மீது உள்ள உரிமையினைப் பக்தர்கள் உணராமையுமே காரணமாகும். ஆலயமாக இருந்தாலும் சரி தனி எவ்வதுமான பூர்வீக சொத்தாக இருந்தாலும் சரிதான் அவற்றின் வரலாறு உணரப்படும் போதே அதன் முக்கியத்துவமும் தெரியவரும்.

இந்நிலை ஒன்றே போதும் திரிக்கப்பட்டும் மறைக்கப்பட்டுமுள்ள தமிழரின் உண்மைவரலாற்றை வெளிக்கொண்டு வரவேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்கு. இதன்முதற்படியாக வெளிக்கொண்டு வரப்பட்ட ஆறாம்ஆண்டுவரலாற்றுப் பாட நூல் வரவேற்கத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும். இவ்வாறு வெளிவரும் வரலாற்று நூல்கள் தமிழர் தேசிய எழுச்சிக்கு வழிவகுக்கும் அதேவேளை தப்பான வரலாற்றை திணிக்கும் முயற்சிக்கும் முற்றுப் புள்ளி வைக்கும்.

---

மின் ஒழுக்கால் சில அகதிகள் மரணமானதாக செய்திகள் வெளிவந்தனவே. இதுபற்றி மேலதிக விபரம் ஏதாவது...

பதில்: அது ஒரு திட்டமிட்ட செயலாகும் உண்மையில் மின் ஒழுக்கினால் அவ்வாறான சம்பவம் நிகழவில்லை. முஸ்லிம் ஊர்காவல்படையினரின் கைக்குண்டு வீச்சினால் தான் அந்தமரணங்கள் நிகழ்ந்தன தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்த ஒரு குழந்தை அதன் தாய் உட்பட பதின்மூன்று பேர் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். பதினைந்து பேர் காயமடைந்துள்ளனர். மிக நேர்த்தியாக திட்டமிட்டு இப்படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. அதிரடிப்படையினர் காவல்நிற்க முஸ்லிம் ஊர்காவல் படையினர் இப்

சம்பவம் நடைபெறும் போது அதிபர் அங்கு இல்லை. பிள்ளைகளும் அன்று பாடசாலைக்கு வரவில்லை. பின்னர் மின் ஒழுக்கால் இச்சம்பவம் நடந்ததென்றும், பட்டாசு கொழுத்தியதால் இந்த விபரீதம் ஏற்பட்டுவிட்டதென்றும் பத்திரிகைகளில் செய்தி

இணைந்த எமது தாயக மண்ணில் நாம் எந்த இடத்தில் இருந்து போராடினாலும் அது போராட்டத்தின் வெற்றிக்காகத்தான். இராணுவம் எந்த மூலையில் அழிந்தாலும் அது போராட்டத்தின் வெற்றிக்காகத்தான் கிழக்கில் இருந்து வரும் இரா

முகாம்கள் அமைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைகின்றார்கள். ஆனால் இந்திய இராணுவத்தினர் மற்றும் இயக்கங்களுடன் மோதிய அனுபவம் எமக்கிருப்பதால் எம்மால் எதனையும் தாக்குப் பிடிக்க முடியும்.

கேள்வி: இவ்வளவு காலத்தில் போராட்ட ரீதியாக நீங்கள் என்ன வளர்ச்சியைக் கண்டிருக்கிறீர்கள்.

பதில்: அனுபவ ரீதியாக மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள்-ஆயுதப்போராட்டம் மூலமதான் எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்கமுடியுமென்று. அதனால் பெரியளவில் இளைஞர்களும் யுவதிகளும் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

அத்துடன் தங்களால் இயன்ற சகல வழிகளிலும் மக்கள் போராட்டத்துக்கு உதவி செய்து வருகின்றனர். இதனால் போராட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு நிலைமைகள் குறித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் 07.09.1991 அன்று "ஈழநாதம்" நிருபருக்கு வழங்கிய விசேட பேட்டியின் இறுதிப் பகுதி இங்கே தரப்படுகிறது.**

வரச் செய்துவிட்டனர். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த சில முஸ்லிம் தனவந்தர்கள் மூன்று லொறிகளில் உணவுப் பொருள்களை கொண்டுபோய் மக்களை சமாதானப்படுத்த முயன்றனர். எனினும் பாதிக்கப்பட்ட மக்கள் இதனை ஏற்கவில்லை. திருப்பியனுப்பிவிட்டனர்.

கேள்வி: அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினரால் 'கிழக்கு மாகாண மக்களுக்கு' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. இதில் வடக்கு மாகாணத்தில் கூடுதலாக மரணமடைவது கிழக்கு இளைஞர்களே என்று குறிப்பிட்டிருந்ததாக தெரியவருகிறது. இப்படியான துண்டுப் பிரசுரங்களால் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டதா?

பதில்: எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சில போஸ்டர்கள் மட்டுமே ஒட்டப்பட்டுள்ளன ஏனெனில் இனப்படுகொலையை மேற்கொள்ளும் இராணுவமே இதனை வெளியிடுவதால் அதன் உள்நோக்கத்தை எல்லா மக்களுமே நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவமானது தனது படைகளுக்கு ஆட்களைத் திரட்டும்போது எல்லா இடத்திலும் போராட வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் திரட்டுகின்றது.

ணுவம் வடக்கில் சாகும் போது அங்கே கிழக்கு பாதுகாக்கப்படுகிறது கிழக்கு மாகாணத்தின் ஒரு போராளி வடக்கில் வீரமரணமடைந்தாலும் அது போராட்டத்தின் வளர்ச்சிக்குத்தான். இதுபோல வடபகுதிப் போராளிகள் கிழக்கில் களத்தில் நிற்கிறார்கள். அவர்களில் பலர் கிழக்கில் வீரமரணமடைந்துள்ளார்கள் என்பதை மக்கள் நன்கு புரிந்தே உள்ளனர். ஆதலால் இத்தகைய பிரசாரங்கள் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தி விடப் போவதில்லை. உதாரணமாக அண்மையில் வந்தாறுமூலையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு ரெலோ உறுப்பினர் கொல்லப்பட்டார். அதன் பின் வீதியால் சென்ற பொதுமக்களை ரெலோவினர் தாக்கினர். ''ஏன் எங்களில் ஒருவன் செத்தான்? நாங்கள் உங்களுக்காகத்தானே ஆயுதம் ஏந்தினோம்'' என்று பொதுமக்களிடம் கேட்டார்கள். அதற்குப் பொதுமக்கள் ''நீங்கள்எங்களுக்காக ஆயுதம் ஏந்தவில்லை. எங்களுக்கு அடிக்கிறதுக்காகத்தான் ஆயுதம் ஏந்தி உள்ளீர்கள்'' எனத் திருப்பிக் கேட்டனர்.

கேள்வி: இப்போதைய போர் என்ன நிலையில் உள்ளது? இராணுவத்தினரின் உத்திகள் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

---

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று (11-9-91) நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இடம் பெறும் இப்போட்டி பிற்பகல் 1-30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-30 மணிக்கு முடிவுறும்.

## பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றை கிளிநொச்சி கல்வித்திணைக்களம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடாத்தியுள்ளது. இதில் கிளிநொச்சி மாவட்ட கல்வித்திணைக்களத்தின் உயரதிகாரிகள் கலந்து கொண்டு விரிவுரைகளை நடாத்தினர்.

கடந்த 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்புகளின் இறுதி நாளில் ஆசிரியர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது.

## கண்டெடுக்கப்பட்டது

(நமது நிருபர்)

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று கடந்த ஞாயிறு அன்று நல்லூர் மேற்கு வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 15 ஆம் திகதி கிழக்குமாகாண பரீட்சை முடிவு

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் நடைபெற்ற விசேட க. பொ. த. உயர்தரப்பரீட்சை முடிவுகள் எதிர் வரும் 15 ஆம்திகதிவெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் 16,000 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்றும் இவர்களுக்கான பரீட்சை முடிவுகளே 15 ஆம் திகதி வெளிவரவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எம். பிகளின் இராஜினாமாக் கடிதங்கள்

# ஜே. ஆரிடம் இருந்தமையால் எதிர் பிரேரணை வரவில்லை

## - பிரேமதாசா

(கொழும்பு)

பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டவுடனேயே அவர்களது ராஜினாமாக் கடிதங்களையும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பெற்று விட்டார். ஆதலால் தான் அவரது ஆட்சிக் காலத்தில் அவருக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்படவில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் எழுச்சிக் கிராமங்களை திறந்து வைத்துப்பேசிய பிரேமதாசா "ஜே. ஆரின் காலத்தில் ஏன் இவ்வாறு நடைபெறவில்லை. உங்களது ஆட்சிக் காலத்தில் தான் நடைபெறுகின்றது" என்று சிலர் கேட்கிறார்கள் என்றும், அவர்களுக்குதான் அளிக்கும் பதில் தான் இதுவென்றும் தெரிவித்தார்.

அதே நேரம் ஏற்கனவே ராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்திருக்கும் முறையை தான் அங்கீகரிக்கவில்லை என்றும்,

சுயநலத்திற்காக கட்சிக்குள் குரல் எழுப்பியவர்கள் தமது ராஜினாமாக் கடிதங்களை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரிடம் ஒப்படைத்திருந்தனர் என்றும்முன்னாள் ஜனாதிபதி இவ்விதம் செய்யாதிருந்தால் அவருக்கும் இதுதான் நடந்திருக்கும் என்றும்பிரேமதாசா தெரிவித்தார்.

தங்கம்மா ஞாபகார்த்த

# குருநகர் பிரசவ விடுதி மீண்டும் இன்று திறப்பு

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்காது இருந்துவந்த குருநகர் அரசினர் தங்கம்மா ஞாபகார்த்த வைத்தியசாலை பிரசவவிடுதி மீண்டும் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்திய இராணுவ நடவடிக்கையால் சேதம் அடைந்திருந்த பிரசவவிடுதி தளபாடங்கள் திருடடுப்போனதை அடுத்து இயங்காமல் இருந்து வந்தது தெரிந்ததே.

சிறுவர் பராமரிப்பு நிலையம், வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் ஆகியன பிரசவ விடுதி மீண்டும் இயங்குவதற்கு தேவையான தளபாடங்களை வழங்கியுள்ளன

குருநகர் சுகாதாரக் குழுக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இப்பிரசவ விடுதி திறப்புவிழா வைபவத்தில் வடபிராந்திய சுகாதாரப்பணியக அத்தியட்சகர் டாக்டர் நா. கனகசபை சம்பிரதாய பூர்வமாகவிடுதியை திறந்துவைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# விசேடபிற்பகல்வகுப்புகளை நிறுத்த பிரேமா உத்தரவு

(கொழும்பு)

பாடசாலைகளில் நடத்தப்படும் விசேட பிற்பகல் வகுப்புகளை இடைநிறுத்தி வைக்கும்படி கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய இத்தமுறையை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்த்துள்ளனர் என்றும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மேலதிக உதவி தேவைப்படும் மாணவர்களின் வசதிக்காக மாற்றுத் திட்டம் ஒன்றை தயாரிக்குபடியும் பிரேமதாசா செயலாளரைக்கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் விசேட பிற்பகல் வகுப்புகளை வைக்கும் நடைமுறையை முன்னாள் கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொண்டுவந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணத்தை வங்கிக்கு கொண்டு செல்ல வேண்டாம்

கப்பல் மூலம் யாழ். மாவட்ட வங்கிகளுக்கு எடுத்து வரப்படும் பணத்தை வங்கியின் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டாம் எனப் பணிக்கப்பட்டிருக்கின்றது.

மாதாந்தம் இங்கு எடுத்து வரப்படும் பணத்தைபருத்தித்

நிவாரண

பெற்றுக்கொண்டார்.

ஜே–171 கி. சேவையாளர் மேற்படி பட்டியலுடன் மே

## 40 லட்சம் ரூபா செலவு

.ராஜீவ் காந்தி கொலை வழ

## பரீட்சை பிற்போடப் பட்டது

(கொழும்பு)

இம் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக எம். பி. பி. எஸ் பரீட்சை வரும் அக்டோபர் 21ம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நேற்று முன்தினம்கொழும்பில் வெளியிட்டது

# அமைச்சர் ஹேரத் சார்க் நாடுகளுக்குப் பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நான்கு சார்க் நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து புறப்பட்டார். அவருடன் வெளிவிவகார செயலாளர் பெர்னாட் திலகரத்தினா, அரசியல் விவகார பணிப்பாளர் ஹேசால் றொட்றிக்கோ, சார்க் பிரதிப் பணிப்பாளர் றொமேஷ் ஜயசிங்க ஆகியோரும் பயணமாகினர். இந்த விஜயத்தின் போது ஹேரத் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார் கொழும்பில் நடைபெறவுள்ள ஆறாவது சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும்படி இந்நாடுகளின் தலைவர்களுக்கு பிரேமதாசாவின் அழைப்பை திரு ஹேரத் நேரில் கையளிக்கவுள்ளார்.

# பல்கலை. புதுமுக மாணவர் கலந்துரையாடல்

பல்கலைக்கழகத்திற்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள புதுமுகமாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் நிகழ்வொன்று யாழ். மாவட்டத்தில் சகல பிரிவுகளிலும் நடைபெறவுள்ளது.

வலிகாமம் பிரிவையும் தீவகம் பகுதியையும் சேர்ந்த புதுமுக மாணவர்களுக்கு 12.9.91 காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் நியூமாஸ்டர் கல்வி நிலையத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

வடமராட்சிப் பகுதியை சேர்ந்த புதுமுக மாணவர்களுக்கு 13.09.91 காலை 10.00 மணிக்கு நெல்லியடி மொடேன் கல்வி நிலையத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

தென்மராட்சிப் பிரிவைச் சேர்ந்த புதுமுக மாணவர்களுக்கு 14.09.91 காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் அனைவரும் இக்கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

மலையை

5 மெற்றிக் தொன் சவர்க்காரம் வருகிறது என்று யாழ்ப்பாண செயலக வட்டார அதிகாரிகள் அறிக்கை விடுவது கேலிக் கூத்தாக இருக்கிறது என்று ஒரு பாவனையாளர் தெரிவித்தார்.

மேலும் 65 பீப்பாக்களில் ஆகக் கூடுதலாக வரக்கூடிய மண்ணெண்ணெய் 13, 650 லீற்றர். யாழ்ப்பாணத்து குடிசனத்தொகை செயலக மதிப்பீடுகளின் படி 1 000,000 மாகும். இத்தொகையைக் குடும்பத்துக்குக் குறைந்தது ஐந்துபேர் எனக் கணக்கிட்டாலும் 2,00,000 குடும்பங்கள் உள்ளன ஆகவே குடும்பத்திற்கு 4 மாதகாலத்திற்கு மேற்பட்ட இடைவெளிக்கு ஒரு லீற்றர் எண்ணெய்தானும் வழங்கக் கூடியதாக இல்லை. சவர்க்காரத்தைப் பற்றிச் சொல்லவும் தேவையில்லை கப்பலில் கொண்டு வருவதாகக் கூறப்படும் சவர்க்காரமும் ஒரு லொறியில் ஏற்றக் கூடிய அளவில் நாலில் ஒரு பங்காகவே உள்ளது இதை எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள்? இப்படிக் கேட்கிறார். பாவனையாளர்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அடிக்கடி அரச அதிபர் கொழும்புக்குப் போய் அதிகாரிகளைச் சந்தித்து வருவதாகச் சொல்லப்

வடக்கில்

பலவழிகளிலும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இப்பிரிப்பின்மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பின்னடையச் செய்வதோடு, போராட்ட வளர்ச்சியையும் நசுக்கி தமிழினத்தை அடிமைப்பட்ட இனமாக்க அரசு முனைந்துவருகிறது என்றார்.

## பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமுடியாது

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கிழக்கு மாகாண மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்களா என்று கேட்ட போது பேச்சுவார்த்தைமூலம்

தும் அவர்களுக்கு நியாயமான சந்தர்ப்பங்களும், போராட்டத்தில் பெரும் பங்கும் வழங்கப்பட்டன. இருந்தபோதும் அரசின் அற்ப சலுகைகளுக்கு அவர்கள் அடிமையாகி விட்டார்கள் என்றார்.

கிழக்கு மாகாணத்தில் போராளிகளை விட பொது மக்களுக்கே பெருமளவு இழப்புகள் ஏற்பட்டன. முஸ்லிம்களால் அவர்கள்இனங்காட்டப்பட்டதே இதற்குக் காரணமாகும்முஸ்லிம்களை எதிர்காலத்தில் புலிகள் மன்னித்தாலும், பொதுமக்கள் மன்னிக்கமாட்டார்கள் எனவும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் முஸ்லிம்களின் தலைவர்கள் உண்மைநிலையை அவர்களுக்கு உணர்த்தத் தவறிவிட்டார்

செய்துள்ள இப்பிரசவ விடுதி

தற்போதைய இத்தமுறையை

# பணத்தை வங்கிக்கு கொண்டு செல்ல வேண்டாம்

கப்பல் மூலம் யாழ். மாவட்ட வங்கிகளுக்கு எடுத்து வரப்படும் பணத்தை வங்கியின் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டாம் எனப் பணிக்கப்பட்டிருக்கின்றது.

மாதாந்தம் இங்கு எடுத்து வரப்படும் பணத்தைபருத்தித் துறைத் துறைமுகத்தில் கொண்டுவந்து இறக்கியதும் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் திணைக்களங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் இப்பணத்தை அலுவலகத்திற்குக் கொண்டு செல்வதை நிறுத்திக் கொள்ளும் படியும் நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட வங்கி முகாமையாளர்களுக்கு அறிவித்துள்ளது

(க)

---

### நிவாரண

பெற்றுக்கொண்டார்.

ஜே-171 கி. சேவையாளர் மேற்படி பட்டியலுடன் மேலும் தமக்கு வேண்டிய 100 பேரின் பெயர்களைத் தானாகவே சேர்த்து பிரிவு அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார். குறிப்பிட்ட மூளாய்-பொன்னாலைச் சந்தியில் இவ்வளவு குடும்பங்கள் இல்லை என்று கூறி 'அ' அட்டையை 'இ' அட்டையாக மாற்ற உ. அரசாங்க அதிபர் மறுத்து விட்டாராம்.

பின்பு இவர்கள் தமது உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்த போது, அவர் யாழ். கச்சேரியில் இவ்விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குக் கடிதம் கொடுத்துள்ளார். அவர் உங்கள் அரசாங்க அதிபரிடம் கூறுங்கள் என்று திருப்பி அனுப்பிவிட்டார்.

குடியேற்ற வாசிகள் கடற்கரைத் தாளங்காயாக அலைகிறார்கள்.

---

### புலிகளின்

சக்திகள் இந்த மாதம் 1ஆம் திகதி வேலூரில் கூட்டம் நடத்துவதாகஅறிவித்தவுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் கைதுசெய்யப்பட்டு பிறகு அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று குறிபபிட்ட ஜெயலலிதா, இவர்கலைளப் பொறுத்திருந்து பார்க்கலாம் என்று விடுதலை செய்ததாகவும், இனிமேலும் அரசு அப்படிச் செய்யாது என்றும் தெளிவுபடுத்தினார்.

மதுரையில் தேச விரோத சக்திகள் கூட்டம் போட்டது பற்றி அரசுக்கும் தகவல் கிடைத்ததாக ஜெயலலிதா தெரிவித்தார். இனிமேல் இச்சக்திகள் இப்படிச் செயற்பட அனுமதிக்கப் படமாட்டாது இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

---

## சுரேஷ் கைது

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுரேஷ் எனப்படும் நிக்ஸன் கடந்த சனிக்கிழமை திருச்சியில் கைதுசெய்யப்பட்டார் என்று தமிழக காவல்துறை கண்காணிப்பாளர் வி. ஜெசநாதன் தெரிவித்துள்ளளார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் "நிக்ஸன் யாழ்ப்பாணத்திலிருந்துதகுந்த ஆவணங்களின்றி 9 மாதங்களுக்கு முன்னர் ராமேஸ்வரம் வந்ததாகவும், காவல் நிலையத்தில் தனது பெயரை அவர் பதிவு செய்துகொள்ளவில்லை என்றும், துறையூரில் உள்ள சிறப்புக் காவல் முகாமிற்கு இவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்" என்றும் அவர் தெரிவித்தார்.

---

### வீரவணக்கம்

த்தை தழுவிக் கொண்டுள்ளனர். இதேதினம் நடைபெற்ற மோதலில் விழுப்புண்பட்டு சிகிச்சை பெற்றுவந்தயோய்சி (வாசுகி காளிமுத்து, 7 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி) என்பவரும் வீரமரணத்தை தழுவிக் கொண்டுள்ளார். இவர்கள் அனைவருக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

---

செயலாளரைக்கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் விசேட பிற்பகல் வகுப்புகளை வைக்கும் நடைமுறையை முன்னாள் கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொண்டுவந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## 40 லட்சம் ரூபா செலவு

.ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை நடத்தும் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு இதுவரை செலவான தொகை நாற்பது லட்சத்தை தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது

தனித் தனியாக வழக்குத் தொடுத்துள்ளதாலும், பிற வழிகளாலும் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

---

### இரு கிணற்றில்

அதேவேளை அந்த இரு கிணறுகளும் முழுமையாகத் தோண்டி முடியவில்லை தொடர்ந்து நாளை தோண்டப்பட உள்ளது.

மேலும் இத்துடன் சில நாட்களுக்கு முன் தோண்டப் பட்டதுடன் சேர்த்து மொத்தமாக 3 கிணறுகள் தோண்டப் பட்டுள்ளது. அவற்றில் 24 பேருடைய எலும்புக்கூடுகளும் உடுப்புகளும் இருந்தது இன்னும் இரண்டு கிணறுகள் மூடப்பட்ட நிலையில்உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பொதுமக்கள் பலர் காலையில் இருந்து மாலை வரை தொடர்ந்து கிணற்றில் இருந்து எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த எலும்புகளையும் உடுப்புகளையும் அவதானித்ததுடன் மருத்துவத்துறையினர்எலும்புகளைக்கொண்டு சென்றனர். பொதுமக்கள் சிலர் கிணற்றடியில் அழுது புலம்பியதையும் காணமுடிந்தது. (88)

---

மைப்பட்ட இனமாக்க அரசு முனைந்துவருகிறது என்றார்.

### பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமுடியாது

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கிழக்கு மாகாண மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்களா என்று கேட்ட போது பேச்சுவார்த்தைமூலம் எமது பிரச்சினையைத் தீர்க்க முடியாது என அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். 1948 ஆம் ஆண்டில் இருந்து பலதரப்பினரு[illegible]டலவழிகளிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ள போதிலும் இதுவரை எவ்வித தீர்வும் காணவில்லை. போராட்டத்தின் மூலம் மட்டுமே எமது உரிமைகளை மீட்டெடுக்க முடியும் என்பதை கிழக்கு மாகாண மக்கள் தற்போது முற்றுமுழுதாகநம்பியுள்ளார்கள். இதன் காரணமாக எமது இயக்கத்துடன் இணைந்து அவர்கள் செயற்பட்டு வருகிறார்கள் என்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், விடுதலைப் புலிகள் கொடுத்த இராணுவ அழுத்தம் தான் சிறிலங்கா அரசைப் பேச்சுவார்த்தைக்கு முன்பு அழைத்தது. நாம் அப்போது ஆயுதப் போராட்டத்தை நடாத்தியிராவிட்டால் அரசு பேச்சுவார்த்தையைப் பற்றியே சிந்தித்திருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

### முழுமையான சந்தர்ப்பவாதிகள்

முஸ்லிம் மக்களுடனானஉறவுகள் குறித்துக் கேட்டபோது முஸ்லிம்கள் முழுமையான சந்தர்ப்பவாதிகள், அவர்களில் மிகக் குறைவான எண்ணிக்கையானோரேஎமது போராட்டத்தில் இணைந்தபோ

போராளிகளை விட பொது மக்களுக்கே பெருமளவு இழப்புகள் ஏற்பட்டன. முஸ்லிம்களால் அவர்கள்இனங்காட்டப்பட்டதே இதற்குக் காரணமாகும்முஸ்லிம்களை எதிர்காலத்தில் புலிகள் மன்னித்தாலும், பொதுமக்கள் மன்னிக்கமாட்டார்கள் எனவும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் முஸ்லிம்களின் தலைவர்கள் உண்மைநிலையை அவர்களுக்கு உணர்த்தத் தவறிவிட்டார்கள். எதிர்காலத்தை தீர்க்கதரிசனமாக அவர்கள் பார்க்கவில்லை.

அக்காலத்தில் தேர்தல் நடைபெறலாம் என்ற நப்பாசையினாலேயே எம்முடன் அவர்கள் இணைந்து செயற்படுவது போல் நடித்துள்ளார்கள் ஆட்சிபீடமேறுவதே அவர்களின் ஓரே நோக்கமாக இருந்தது. மொழிரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ அவர்கள் எம்முடன் இணையவில்லை என்றார்.

### கட்டாய மத மாற்றம்

இதைவிட தமிழ் மக்களை முஸ்லிம்கள் கட்டாய மத மாற்றம் செய்வதில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுவரை இருநூறு பேருக்கு மேல் கிண்ணியா, தோப்பூர் பகுதிகளில் மதமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (மு)

---

வருவதாகக் கூறப்படும் சவர்க்காரமும் ஒரு லொறியில் ஏற்றக் கூடிய அளவில் நாலில் ஒரு பங்காகவே உள்ளது இதை எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள்?

இப்படிக் கேட்கிறார். பாவலையாளர்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அடிக்கடி அரச அதிபர் கொழும்புக்குப் போய் அதிகாரிகளைச் சந்தித்து வருவதாகச் சொல்லப் படுகிறது. பத்திரிகைச் செய்திகளின்படி அரசாங்கம் பல பண்டங்களை யாழ்ப்பாணம் அனுப்புவதாகக் கூறப் படுகிறது ஆனால், மக்களால் பண்டங்களைக் காண முடியாது இருக்கிறது. இந்த நிலையில் யாழ்ப்பாணச் செயலக அதிகாரிகள் மலையைக் கெல்லி எலியைத்தான் பிடிக்கிறார்களா என்ன? என்ற கேள்விதான் எழுகிறது என்றார்.

---

### மணலாறு

சுமார் இருபத்தைந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் சுமார் ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கலாமெனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்ற போதும் இராணுவத்தரப்பில் ஏற்பட்ட இழப்பு பலமடங்கு அதிகம் இருக்கலாமென சுயாதீனமான செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### அவசர

கோப்பாய்

உடுவில், தெல்லிப்பழை

சண்டிலிப்பாய், சங்கானை காரைநகரிலுள்ள ஜெ/40 முதல் ஜெ/48 வரையான கிராமசேவையாளர் பிரிவுகள்

சாவகச்சேரி

பச்சிலைப்பள்ளி

வடமராட்சி கிழக்கு

மாணவர் இயக்க அலுவலகம்
நீர்வேலி

சுன்னாகம் வட்டவைத் தலைவரின் பழைய அலுவலகம்
தற்போது இயங்கும்
சங்கானை அலுவலகம்

சாவகச்சேரி அலுவலகம்

பளை வட்டவைச் செயலகம்

ஆழியவளை (செவ்வாய், வியாழன் மட்டும்)

---


## ஜாம், புரோட்டினெக்ஸ் போத்தல்கள் தேவை

எமது தொழில் நிறுவனத்திற்கு ஜாம் நிரப்புவதற்கு மேற்படி போத்தல்கள் தேவை. பெருந்தொகையாக விநியோகம் செய்யக் கூடியவர்களிடமிருந்தும் சிறுதொகையாக விநியோகம் செய்யக் கூடியவர்களிடமிருந்தும் கிழமை நாட்களில் காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை சந்தை விலையில் கொள்வனவு செய்யப்படும்.

ரேஸ்ட்லைன் இன்ரஸ்ரிஸ் (தனி) லிமிடெட்
TASTLINE INDUSTRIES PVT) Ltd.
14, சினியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(தட்டாதெரு சந்தியில் இருந்து அரசடி வீதியால் நல்லூர் செல்லும்போது இடது பக்கம் வரும் முதல் ஒழுங்கை,)

(R/1732)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.